# நான் உனக்குச் சொன்னதை செய்யுமளவும் உன்னைக் கைவிடுவதில்லை. ஆதி 28 : 15

**சொன்னதைச் செய்யுமளவும் கைவிடுவதில்லை**

கிறிஸ்துவுக்குள் பிரியமான என் அன்பு சகோதரியே, சகோதரனே,

கர்த்தர் உனக்குச் சொன்னதைச் செய்யுமளவும் கட்டாயம் உன்னை கைவிடவே மாட்டார்.

**ஏன் என்றால் வேதம் சொல்லுகிறது. எபி. 13 : 8**

**இயேசு கிறிஸ்து,** நேற்றும் இன்றும், என்றும் மாறாதவராயிருரக்கிறார்

முதலாவதாக, “**மாறாத**” **தேவனைத் துதியுங்கள்.**

**சங். 102 : 27 கூறுகிறது :** நீரோ, மாறாதவராயிருக்கிறீர், உமது ஆண்டுகள்முடிந்து போவதில்லை

எத்தனை மகிழ்ச்சி தேவன் உனக்கு கொடுத்த கிருபை வரங்கள், உன்னை அழைத்த அழைப்பு – இரண்டிலுமே தேவன் மாற மாட்டார். இதே தேவன் உனக்குச் சொன்னதைச் செய்யுமளவும், உன்னைக் கைவிடமாட்டார்.

**ஆதி. 12 : 2 கூறுகிறது,** கர்த்தர் ஆபிராமை நோக்கி, நான் உன்னை பெரிய ஜாதியாக்கி, உன்னை ஆசீர்வதித்து, உன் பேரைப் பெருமைப்படுத்துவேன், நீ ஆசீர்வாதமாய் இருப்பாய் – என்பதாக.

**ஆதி. 24 : 35 கூறுகிறது :** நான் ஆபிரகாமுடைய ஊழியக்காரன், கர்த்தர் என் எஜமானை மிகவும் ஆசீர்வதித்திருக்கிறார். அவர் சீமானாயிருக்கிறார் – என்பதாக. ஆம், பிரியமானவர்களே,

நம்முடைய கர்த்தர் சொன்னதைச் செய்யுமளவும் கைவிடமாட்டார்.

**ஈசாக்கைப் பார்த்து தேவன் சொன்னார். ஆதி. 26 : 3**

இந்த தேசத்திலே வாசம் பண்ணு. நான் உன்னோடே கூட இருந்து, உன்னை ஆசீர்வதிப்பேன். – என்பதாக.

**கைவிடவில்லை. ஆதி. 26 : 12 கூறுகிறது,**

ஈசாக்கு அந்த தேசத்திலே விதை விதைத்தான். கர்த்தர் அவனை ஆசீர்வதித்ததினால், அந்த வருஷத்தில் நூறு மடங்கு பலன் அடைந்தான். அவன் ஐசுவரியவானாகி, வர வர விருத்தியடைந்து, மகா பெரியவனானான். – என்பதாக.

எனக்கு அன்பான கர்த்தருடைய பிள்ளையே உனக்கும் கர்த்தர் சொன்னதைச் செய்வார். கர்த்தர் உனக்கு என்ன சொன்னார் என்பதை மீண்டும் ஒரு முறை சிந்தித்துப் பார். சில நேரங்களில கர்த்தர் சொன்னதைப் போல நினைத்துக் கொண்டு, நாம் நம்முடைய சொந்த திட்டங்களையே யோசித்துக் கொண்டிருப்போம்.

“**முதல் கோணல், முற்றிலும் கோணல்**” என்று கூறுவார்கள்.

அதைப்போலவே, உன்னுடைய காரியத்திலும், முதல் கோணல் இருக்கிறபடியால் உன்னுடைய காரியம் முற்றிலும் கோணலாகவே உள்ளது. ஆதலால் இந்த மாதம் உங்கள் ஆதி தரிசனத்தை சிந்திக்கும் நாள். தேவன் உங்களோடு பேசிய முதல் வார்த்தையை நினைக்கும் நாள் அதைக் கண்டுபிடித்துவிட்டால், ஜெயத்தைக் காண்பீர்கள்.

நீங்களாகவே ஒன்றை உருவாக்கிக் கொள்ள வேண்டாம். கீழ்க்கண்ட வாசகத்தை ஒரு முறை நினைத்துக் கொள்ளுங்கள்.

**ALL THINGS ARE GOOD - BUT EVERYTHING IS NOT CORRECT**

என் அன்பு கர்த்தருடைய பிள்ளையே,

உங்கள் எண்ணத்தில் இருப்பது நல்ல காரியம் தான். ஆனால் தேவன் உங்களிடம் சொல்லாத காரியமாய் இருப்பதால் அது சரியல்ல.

ஆதலால், தேவன் என்ன சொன்னார் என்பதை மீண்டும் சிந்தியுங்கள். செயல்படுங்கள். ஜெயம் பெறுங்கள்.

**கர்த்தர் சொல்கிறார்.**

**நான், உனக்குச் சொன்னதைச் செய்யுமளவும், உன்னைக் கைவிடுவதில்லை.** – *என்பதாக. ஆமென்.*

தேவனுக்காக நீ என்ன செய்கிறாய் என்பது பொருளல்ல

தேவன் உன்னை என்ன செய்ய சொன்னார் என்பதே கேள்வியாக உள்ளது.

இயேசுவின் தாயார் சொன்ன வார்த்தையை மீண்டும் நினைப்பூட்டுகிறேன்.

அவர் உங்களுக்கு என்ன சொல்கிறாரோ அதன் படி செய்யுங்கள்.

அப்பொழுது, தண்ணீர் ரசமானது போல, உங்கள் சாதாரண காரியம், அசாதாரணமாக மாறும். நீங்களும் தைரியங்கொண்டு கர்த்தர் சொன்னதை செய்கிறேன் என்ற நிச்சயத்தோடு அறிக்கை செய்யலாம்.

அப்பொழுது கர்த்தர் கூறுவார்.

**நான் உனக்குச் சொன்னதை செய்யுமளவும்**
**உன்னைக் கைவிடுவதில்லை. ஆமென்**